2024 பிப்ரவரி 15]

இலட்சம் மதிப்பில் அந்தப் பள்ளிக்குத் தேவையான மின்சாரத்தை solar மூலமாகப் பெறுவது, பள்ளி வளாகம் முழுவதும் மரங்களை நடவு செய்வது, மூலிகைத் தோட்டம், காய்கறித் தோட்டம் அமைப்பது, பிளாஸ்டிக் இல்லாத வளாகமாக மாற்றுவது, மழைநீர் சேகரிப்பு, காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய விழிப்புணர்வு இப்படி அத்தனை அமைப்புகளோடும்—ஒரு முன்மாதிரித் திட்டத்தை 2022–2023–ல் 25 பள்ளிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பில் நிறைவேற்றினோம். இந்த ஆண்டு ரூ.10 கோடி மதிப்பில், அந்தத் திட்டத்தை கிட்டத்தட்ட 50 பள்ளிகளில் நிறைவேற்றயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பசுமைத் தமிழகம் திட்டம் என்கின்ற மகத்தான திட்டத்தை அறிவித்து, ஆண்டுக்கு 10 கோடி மரங்களை நடவு செய்கின்ற பணிகளை மேற்கொண்டிருக்கிற அந்த வகையில், வருகின்ற நிதியாண்டில் திருவாரூர் மாவட்டத்தில் இருக்கின்ற பள்ளி, கல்லூரிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து பள்ளி, கல்லூரிகளிலும் மரங்கள் நடவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

பால் குளிரூட்டும் நிலையம்

***52524—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடவாசலை தலைமையிடமாகக் கொண்டு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2024 பிப்ரவரி 15

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முதலாவதாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று அவர்கள் கோரிக்கைகள் வைத்த நேரத்தில், தாயுள்ளத்தோடு நம்முடைய முதல்வர் அவர்கள், இன்றைக்கு லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் விலை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே கடந்த ஆண்டு 3 ரூபாய் விலை உயர்த்திக் கொடுத்தார்கள். அதே நேரத்தில், பாலை வாங்கிப் பருகுகின்ற சாதாரண ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, பாலினுடைய விற்பனை விலையை உயர்த்தாமல் லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்து, அதனால் ஏற்படுகின்ற இழப்பை அரசே ஏற்றுக்கொண்டு, ஒரு மிகப் பெரிய சாதனையை நம்முடைய தலைவர் அவர்கள் படைத்தார்கள். இப்போது இரண்டாவது முறையாக, 3 ரூபாய் உயர்த்திய நேரத்திலும், பொது மக்களின் வேண்டுகோளை ஏற்று பாலினுடைய விற்பனை விலையை உயர்த்தவில்லை. அப்படிப்பட்ட ஒரு தாராள மனப்பான்மையோடு நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதுதான் நம்முடைய தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய திராவிட மாடல் அரசு. இந்த நேரத்தில் இந்த அவையில் இருக்கக்கூடிய நாம் அத்தனைபேரும் வேதனையோடு இருக்கின்றோம். காரணம், நேற்றையதினம் ஹரியானாவில் விவசாயப் பெருங்குடிமக்கள் கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடிய நேரத்தில் drone*–களைப் பயன்படுத்தி அவர்கள்மீது கண்ணீர்புகை குண்டுகள் வீசப்பட்ட ஒரு வரலாறும் இன்றைக்கு நம்மை கடந்து சென்று கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், உறுப்பினரின் கேள்விக்குப் பதில் சொன்னீர்களென்றால், கேள்வி நேரம் சரியாகப் போகும்.*

2024 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: முடித்துவிட்டேன். நாட்டே தலைவருக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கும்போது, நான் சொல்லாமல் இருக்க முடியாதல்லவா!

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூரை மையமாகக் கொண்டு 8,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருவதாலும், குடவாசல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து குடவாசல் தட பால் வாகனம்மூலம் சுமார் 1,600 லிட்டர் பால் திருவாரூர் மொத்த பால் குளிரூட்டும் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படுவதாலும், குடவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை என்ற பதிலினை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குடவாசல் பகுதி மக்களுக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக வாழ்வாதாரமாக விளங்குவது கால்நடை வளர்ப்புதான். குடவாசலைப் பொறுத்தவரை, 49 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. அதேபோல, குடவாசலைச் சுற்றியிருக்கிற வலங்கைமான், திருவாரூர், கொரடாச்சேரி போன்ற பகுதிகளில் 50 ஊராட்சிகள் அதைச் சுற்றியே இருக்கின்றன. கிட்டத்தட்ட 100 ஊராட்சிகளுக்கு நடுநாயகமாக விளங்கும் பகுதியாக குடவாசல் இருக்கிறது. அந்தக் கிராமப் பகுதிகளில் வாழ்கிற மக்கள் நெருக்கமாக வாழ்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஒரு வீட்டுக்கு ஒரு பசு மாடு என அவர்கள் வீடுகளில் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய வருமானம் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடைகளை நோக்கியே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில்

ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 15 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது. அதில், மூன்று தனியார் நிறுவனங்கள் தலா 3,000 லிட்டர் என்ற அளவிலே அந்தப் பாலைக் கொள்முதல் செய்கின்றன. அதுமட்டுமல்லாமல், தனி நபர், பாலை எடுத்து விற்பனை செய்பவர்களும், அங்கே கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால், அவர்களுக்கு பாலுக்கு உரிய விலையும் கிடைப்பதில்லை; மொத்தமாகப் பணமும் கிடைப்பதில்லை. ஆவின் பால் நிறுவனம்மூலம் ஒரு நாளைக்கு 300 லிட்டர் கொள்முதல் செய்வதாகத்தான் நான் அறிகிறேன். எனவே, அந்தப் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்து, பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரித்தால், பாலை நம்பி இருக்கிற விவசாயிகளுக்கு மாதம் ஒன்றிற்கு 10,000 ரூபாய் வரை வருமானம் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 723 Bulk Milk Cooling Centres-பால் குளிரூட்டும் மையங்கள் இருக்கின்றன. திருவாரூர் மாவட்டத்தில் 4 பால் குளிரூட்டும் மையங்கள் இருக்கின்றன. இன்னும் எத்தனை எண்ணிக்கையில் பால் குளிரூட்டும் மையங்கள் தேவையென்றாலும் அவற்றை அமைப்பதற்கும் நம்முடைய அரசு தயாராக இருக்கிறது. இது உங்களுக்கெல்லாம் தெரியும். நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய பால் உற்பத்திக்கேற்ற விலை கிடைக்கவில்லை என்று நீண்ட நாட்களாகக் கூறிக்கொண்டு வருகிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: அதன் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, எங்களுக்குச் சரியான

2024 பிப்ரவரி 15]

விலை கிடைக்கவில்லை என்று விவசாயப் பெருங்குடி மக்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். எனவேதான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதன் விலையை 2 முறை உயர்த்தி, ரூ.3/– மற்றும் ரூ.3/– என மொத்தம் ரூ.6/–ஐ வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதில் spot acknowledgement என்ற ஒரு முக்கியமான செயல் இருக்கிறது. அது என்னவென்றால், அவர்கள் பால் அளிக்கின்றபோது, அந்த இடத்திலேயே அதன் தரத்தை நிர்ணயம் செய்து, அதற்கான விலையை அளிக்க வேண்டுமென்பது அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும்; அதாவது 30, 40 வருடக் கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையை தற்போது நாங்கள் முழுமையாக நிறைவேற்றியிருக்கிறோம். விவசாயப் பெருங்குடி மக்கள் பாலை அளிக்கின்ற நேரத்திலேயே, உடனடியாக அதன் தரத்தைப் பரிசோதனை செய்து, அதற்கேற்ற விலையைக் கொடுக்கின்றோம். அவ்வாறு விலை கொடுக்கப்படுவதால், அவர்களுக்கு 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை தற்போது விலை உயர்வு கிடைக்கின்றது. எனவே, விவசாயப் பெருங்குடி மக்கள், விலை உயர்வின்மூலம் ரூ.3+ரூ.3=ரூ.6/– மற்றும் இதன்மூலம் ரூ.4/– என ரூ.10/– அளவிற்குக் கூடுதல் தொகை பெறுகிறார்கள். எனவே, இன்றைய சூழலில், தனியாரை ஒப்பிடும்போது, தனியாரைவிட நாம் கொள்முதல் விலை அதிகமாகக் கொடுக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தத்தமது பகுதிகளிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடம், ஆவின் சம்பந்தப்பட்ட கொள்முதல் நிலையங்களுக்கு பாலை வழங்க பரிந்துரைக்கலாம்.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பணப் பட்டுவாடா பற்றி குறிப்பிட்டார்கள். நான் இந்த அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது 10 நாட்களுக்குமேல் யாருக்கும் பணப் பட்டுவாடா தாமதப்படுவது கிடையாது. நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று, வாரத்திற்கு ஒருமுறை பணப் பட்டுவாடா செய்வதாக அறிவித்தோம். ஆனால், விவசாயப் பெருங்குடி மக்கள், எங்களுக்கு வாரத்திற்கு ஒருமுறை வேண்டாம்; 10 நாட்களுக்கு ஒருமுறை கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், 10 நாட்களுக்கு ஒருமுறை எந்த இடத்திலும் பாக்கி வைக்காமல், அனைத்து பணமும் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றன; எந்த இடத்திலும் பாக்கி இல்லை.

மூன்றாவதாக, கால்நடைகளைப் பெருக்குவதற்காக இப்போது நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இதுவரையிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கால்நடைகளுக்கான கடன் உதவிக்கு வட்டி விகிதம் சுமார் 15 சதவிகிதமாக இருந்தது; தற்போது அது 9 மற்றும் 9.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. எந்த இடத்திலும், அதற்குமேல் வாங்குவதற்கு அனுமதிக்கவில்லை. அதற்கான கூட்டங்கள் கூட்டப்பட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையின் மூலமாக கால்நடை பராமரிப்பிற்கான வட்டியில்லா கடன் பெருமளவில் வழங்கப்பட்டு வருகிறது. யாரும், எவ்வளவு வேண்டுமானாலும் கடனைப் பெறுவதற்கு கூட்டுறவுத் துறையை அணுகலாம். அவற்றை இந்த அரசு வழங்கி வருகிறது. இன்னும் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றி நான் பேசவில்லை. எனவே, இக்காலம் பால்வளத் துறைக்கு ஒரு பொற்காலம் என்றே நான் சொல்வேன். ஏனென்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த கோரிக்கைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வைத்திருக்கின்றார்கள். 1 லிட்டர் பாலுக்கு 6/– ரூபாய் விலை உயர்வும், spot acknowledgement மூலமாக 4/– ரூபாயும் கிடைக்கிறது என்றால், அது மிகப்பெரிய சாதனை என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின்மூலம் பணப் பட்டுவாடா தாமதமாக வழங்கப்படுகிறது என்று நான் சொல்லவில்லை. தனியாரிடம் பால் வழங்குவதனால், விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பணம் உரிய நேரத்தில் மொத்தமாக வந்து சேர்வதில்லை என்றுதான் சொன்னேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2024 பிப்ரவரி 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், அடுத்த கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம், குடவாசல், வலங்கைமான் உள்ளிட்ட திருவாரூர் மாவட்டத்தினுடைய ஒட்டுமொத்த பகுதிகளும் சாதாரண, சாமானிய மக்கள் வாழ்கிற பகுதிகளாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிகளிலே வாழ்கிற விவசாயிகளுக்குக் கால்நடைகளை வளர்ப்பதற்கும், கால்நடைகளை மேம்படுத்துவதற்கும் மானியத்துடன்கூடிய கடனை பால்வளத் துறைமூலம் வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியை உள்வாங்கி, பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இரா. காமராஜ் அவர்கள் கூறியதுபோன்று, அந்தப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. நான் அண்மையில் திருவாரூர் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அங்குள்ள பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அங்கிருந்த விவசாயிகளுடன் நான் உரையாடினேன். மன்னார்குடி பகுதியில் ஒரு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் இருக்கிறது. அது மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதில், தனியாருக்குக் கொடுக்கிறார்கள் என்பதுகூட. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. மானியத்துடன்கூடிய கடன் கொடுப்பீர்களா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்: இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியாருக்குப் பால் போகிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மட்டும் விளக்கம் அளித்துவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இரா. காமராஜ் அவர்களே, தற்போது, மன்னார்குடியில் உள்ள நம்முடைய சங்கமே அதிகமான பால் கொள்முதல் செய்கிறது. ஆனால், local-ல் நிறைய sales ஆவதால், அவர்கள் அதை local-ல் sales செய்கிறார்கள். ஆவினுக்குப் பாலைக் கொடுக்கவில்லை. அவர்களுக்கும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாங்கள் தற்போது உத்தரவிட்டிருக்கிறோம். எல்லோருக்கும் target கொடுத்திருக்கிறோம். யாருக்கு கடன் உதவி தேவைப்பட்டாலும் அவர்கள் ஆவின் அலுவலர்களை அணுகலாம்.

முற்பகல் 11-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மானியத்துடன்கூடிய கடனைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், DIC மூலமாக 35 சதவிகித மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்படுகிறது; தாட்கோ மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; பெண்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; தற்போது பால்வளத் துறை, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் மானியத்துடன்கூடிய கடன் உதவியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. படித்த இளைஞர்கள், வேலையில்லாத இளைஞர்கள், மகளிர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் ஆகியோருக்கு ஏற்கெனவே இந்த சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் நிச்சயமாக எங்களை அணுகலாம். அவர்களுக்கான கடன் வசதியைப் பெற்றுத் தருவதற்குத் தயாராகயிருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

சூரிய சக்தி மின்வேலிகள்

***4079—திரு. ட்டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—